தமிழக சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1968 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. உரை நேர வரம்பைக் கட்டுப்படுத்த வண்ண விளக்கு அமைப்பு.

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir. What are these lights for (pointing to the lights newly installed on the Speaker's table)? Are we to be terrorised by these dangerous lights?

MR. SPEAKER : I suppose the lights will not terrorise as much as the gong?

THIRU K. VINAYAKAM : Red light is always a mark of terror, danger.

MR. SPEAKER : What about the sound of the bell?

THIRU K. VINAYAKAM : The bell is a very innocent article.

MR. SPEAKER : The lights are installed only for trial.

THIRU A. BALASUBRAMANYAN : The bull is always afraid of the red colour.

MR. SPEAKER : If ten minutes are allotted to a member, the yellow light will burn at the eighth minute so that he may continue to talk and finish the topic he is then dealing.

THIRU K. VINAYAKAM : I want you to explain it to the members.

THIRU N. KASIRAMAN : It is like the automatic traffic signal.

MR. SPEAKER : It is not like the traffic signal. It is a device adopted in many conferences. If the Opposition parties think that the bell is milder, we will revert to it. I have not disposed off the gong yet.

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம்

* 180. வினா— **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் பி.ஏ., பி.டி. பாஸ் செய்துவிட்டு உயர் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?